*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(1), 2020*

# கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள்: ஒரு நோக்கு

**எம். அப்துல் றஸாக்**
**பிரதி அதிபர்**
**அக்/அஸ்ஸிறாஜ் மகாவித்தியாலயம்**
**அக்கரைப்பற்று.**

Correspondence: abdulrasak0099@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கிழக்கிலங்கையின் இலக்கிய மரபு தொன்மையும் நீட்சியும் கொண்டது. மிகப் பிரசித்திபெற்ற வாய்மொழி இலக்கியப் பாரம்பரியம் தொடக்கம் நவீன இலக்கியங்கள் வரை இங்கு பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு என்று விரியும் தளங்களில் இங்குள்ளவர்களின் பங்கும் பணியும் விதந்து போற்றத்தக்கன. அவ்வகையில் கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள் குறித்த பார்வையொன்றினை இவ்வாய்வுக் கட்டுரை முன்வைக்க முயற்சிக்கிறது. சமகாலம் பற்றிய பிரக்ஞை இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்பு என்ற காலவரையறையை கொண்டியங்கி வருவது பொதுவான மரபெனினும் ஆய்வின் விரிவஞ்சி இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு பின்வந்த கிழக்கிலங்கையரின் நாவல்கள் குறித்துப் பேசுவது சாலப் பொருத்தமுடையதாகும். ஏனைய நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நவீன கவிதை போலன்றி நாவல்கள் விரிவான பாடுபொருட்களைக் கொண்டமைந்து காணப்படுகின்றன. அதேவேளை சிற்றிதழ்கள், நிறுவனங்கள் போன்றவற்றின் குறைவான பங்களிப்புடன் வெளிவரும் இந்நாவல்கள் பெரும்பாலும் தனிமனித முயற்சிகளாகவே அமைந்து காணப்படுகின்றன. இதனால் கிழக்கிலங்கை நாவல்கள் பல்வேறு பொருட்கோடல்களோடு பல்வகைப் பாடுபொருட்களையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வகையில் தற்காலத்தில் வெளிவந்த நாவல்கள் பலவும் பொருள், வடிவம் சார்ந்த பிரக்ஞையுடன் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இந்நாவல்கள் வெளிவந்த காலத்தில் அவைபற்றி வெளிவந்த கருத்துக்களும், நாவலாசிரியர்களின் நேர்காணல்கள், திறனாய்வுப் பார்வைகள் போன்றன இவ்வாய்வின் மூலங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாயிரமாம் ஆண்டிற்குப் பின்னரான நாவல்கள் பெரும்பாலும் ஆய்வுக்குட்படுத்தப்படாத நிலையில் இந்நாவல்கள் கொண்டுள்ள கருத்தியல் வெளிப்பாடு, வடிவம்சார் உத்திகள், பரிசோதனை முயற்சிகள் என்பன ஆய்வுநோக்கில் மேற்கொள்ளப்படாமை இவ்வாய்வு எதிர்நோக்கிய ஆய்வுப் பிரச்சினைகளாகும்.இவற்றை நிவர்த்திக்கும் வகையில் சமகாலத்தில் கிழக்கிலங்கையில் தோன்றிய நாவல் இலக்கியங்கள் பற்றிய இப்பன்முக ஆய்வானது இப்பிரதேச நாவல் இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலை, பொருளில் ஏற்பட்டுள்ள மாற்றம், வடிவமாற்றம் என்பவற்றை நுணுக்கமாக பரிசீலிக்கிறது.

**பிரதான சொற்கள்:** நாவல், கிழக்கிலங்கை, பாடுபொருள், வகிபாகம், தனித்துவம்

## 1. அறிமுகம்

நாவல் என்பது ஆங்கிலத்தில் *Fiction* என்று அழைக்கப்படும் புனைகதை வடிவங்களில் ஒன்றாகும். இலக்கிய வடிவங்களில் காவியங்களுக்கு அடுத்து மிகப்பெரிய வாழ்க்கைத் திட்டத்தை முன்வைக்கும் வடிவமாக இந்நாவல் திகழ்கிறது. உலகமொழிகளிலும், தமிழிலும் கூட நாவல்கள் இவ்வாழ்க்கைத் திட்டத்தை பல்வேறு அனுபவக் களங்களினூடாக பரிசோதித்துக் கொண்டும், தம்மைப் புதுப்பித்துக் கொண்டும் வருகின்றன.

போருக்குப் பின்னரான வாழ்வு, பல்லின சமூகம்சார் நெருக்கடிகள், தனிமனித உணர்வுப் போராட்டங்கள், சாதியம், தொழில் ரீதியான ஒடுக்குதல்கள், தனித்துவ தேசியம் போன்ற பாடுபொருட்கள் கிழக்கிலங்கை நாவல்களில் உச்சம் கொள்கின்றன. ஒப்பீட்டளவில் நாவல்களின் வெளிப்பாடு இங்கு குறைந்தளவே நிகழ்ந்திருக்கிறதெனினும் சொல்லும்படியான பரிசோதனை முயற்சிகள் பலவும் நாவல்களினூடே இடம்பெற்றிருக்கின்றன. கிழக்கிலங்கைக்கே உரித்தான தனித்துவ மொழி வெளிப்பாடும், கதைசொல்லும் பாங்கும், கதைக்களங்களும் பலரையும் இங்குள்ள நாவல்களின்பால் ஈர்க்கச் செய்திருக்கின்றன.

இவ்வகையில் சிறுகதை மற்றும் நாவல் துறைகளில் இயங்கிவந்த மூத்த தலைமுறையினரே இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்குப் பிறகான நாவல்களை எமக்கு கையளிக்கும் முயற்சியை தொடக்கி வைக்கின்றனர்.

## 2. கிழக்கிலங்கையின் சமகால நாவல்கள்

புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தாலும் தொடர்ச்சியாக நாவல்களை எழுதிவருபவர் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் ஆவார். இவரின் 'நாளைய மனிதர்கள்' (2003) என்னும் நாவல், பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இனங்களிடையேயும் குடியேறிப் பரவியிருக்கும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலை, அவ்வாழ்வியலின் இன்றைய நிலையை படம் பிடித்துக் காட்டும் ஒன்றாகும். ஒருவிதத்தில் புலம்பெயர் அகதிகளாக வாழும் இம்மக்கள் தாம் எதிர்நோக்கும் கலாசார நெருக்கடிகளினுள்ளும் இனம் மொழி என்பவற்றைக் கடந்தும் அன்பினைப் போற்ற முடியும் என்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது.

சமூக அடுக்கமைவுசார் வாழ்வியலை பேசும் ஆ.மு.சி. வேலழகனின் நாவல்கள் பலவும் இரண்டாயிரங்களில் வெளிவந்துள்ளன. வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் இவரது நாவல்களில்,'கோடாமை சான்றோர்க்கனி' (2000),'சில்லிக்கொடி ஆற்றங்கரை' (2004),'இவர்கள் மத்தியிலே' (2006) 'காடும் கழனியும்' (2009) போன்றவை முக்கியமானவையாகும். மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதிகளில் 1940 களில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொண்டுவந்த விவசாய சமூகத்தினரது பின்னணியில் வேடுவர் வாழ்க்கை பற்றிச் சொல்லுகின்ற 'சில்லிக்கொடி ஆற்றங்கரை' இவற்றுள் விதந்துரைக்கத்தக்கது. மொனராகலை பிரதேசத்திலுள்ள வன பரிபாலன செயலகத்தை களமாகக் கொண்ட 'காடும் கழனியும்' கவனிக்கத்தக்க நாவலாகும்.

சிறுகதையாளராகவும் அறியப்படுகின்ற விமல் குழந்தைவேலின் 'வெள்ளாவி' (2004) அடித்தள மக்களாகிய சலவைத் தொழிலாளர்களின் வாழ்வியல் பின்புலத்தில் வெளிவந்த முக்கிய நாவல்களில் ஒன்றாக நோக்கப்படுகின்றது. யதார்த்தப் பின்புலத்திலிருந்து எழுந்த இந்நாவலின் பேச்சுவழக்குச் சொற்களுக்காகவே இந்நாவல் சிலாகிக்கப்பட்டது. இதுகுறித்து தே. வெற்றிச் செல்வன் குறிப்பிடும்போது :

> "விமல் குழந்தைவேலின் வெள்ளாவி நாவல் ஈழவட்டார எழுத்து முறைமையிலிருந்தே முற்றிலும் மாறுபட்ட, புதுமையான இதுகாறும் அறிந்திராத கோளாவில் தீவுக்காலை வட்டார மொழியாலும் உடைவெளுக்கும் தொழில் செய்யும் வினோத சடங்குகள் கொண்ட வண்ணாரக்குடி வாழ்முறைப் பதிவாலும் புதுமையான கதையாடல் அமையப் பெற்றுள்ளது எனலாம்"

எனக் குறிப்பிடுகின்றார். இயல்புவாதப் பின்புலத்தில் வட்டார வழக்கை சிறப்பாகப் பயன்படுத்திய நாவல்களில் வெள்ளாவியும் ஒன்று என்பது ஜெயமோகன் போன்றவர்களின் கருத்து. "விமல் குழந்தைவேலின் வெள்ளாவி நாவல் இதே நடையில் வாழ்வின் எச்சங்களை இதேபோலப் பேசுவது என்பதைக் கவனிக்கும்போது இவ்வழகியலின் பணி இன்றும் தொடர்வதை உணர முடிகிறது" என்கிறார் ஜெயமோகன். இவ்வழகியல் பணி என்பதே அடித்தள மக்களின் நேரடி வாய்மொழியில் இந்நாவல் நகர்கிறது என்பதுதான். இதனை ஷோபாசக்தி :

> “மட்டக்களப்பு வட்டாரமொழி கையாளப்பட்டிருக்கிறது என்பதற்கு அப்பால் அந்தநாவலில் சிறப்புகள் ஏதுமில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதாரமான பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளாமல் சாதியச் சமூகத்தின் கட்டமைப்புக்களைப் புரிந்துகொள்ளாமல் போடியார், பாலியல், பலாத்காரம், பழிவாங்கல் என்று மோசமான தமிழ்ச்சினிமாப் பாணியில் எழுதப்பட்ட நாவலது”

என்று வேறொரு கோணத்தில் நோக்குகின்றார். சாதிய நெருக்கடிகளின் விளைவாக ‘வெள்ளாவி’ ஈழத்தில் தடைசெய்யப்பட்டது. இத்தகைய சாதிய பின்புலத்தில் முளைத்தெழுந்த பிரளயம், பஞ்சமர் என்பவற்றை விடவும் வெள்ளாவி சிறப்பாக வெளிவந்துள்ளது என்பது பேராசிரியர் செ. யோகராசா (2015:17) போன்றவர்களின் பார்வையாக இருப்பதும் அவதானிக்கத்தக்கது.

விமல் குழந்தைவேலின் ‘கசகறணம்’ (2011) இன்னுமொரு முக்கிய நாவலாகும். தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ்ந்து சிதைந்துபோன கதையை இந்நாவல் கூறுகிறது. தமிழ் முஸ்லிம் மக்களின் அன்பு கலந்த வாழ்வை ஆயுதக் குழுக்கள் எப்படிச் சிதைத்தார்கள் என்பதைச் சொல்கிறது. தமிழ் முஸ்லிம் கசப்புணர்வுகள் எவ்வாறு தொடங்கின என்பதைச் சொல்லி கதை நகர்கிறது. நாவலின் முன்குறிப்பில் ‘மூன்றாவது மனிதன்’ ஆசிரியர் எம். பௌசர் (2016: 15) கூறும்போது :

> “விமல் குழந்தைவேலின் மனஉலகில் வார்க்கப்பட்டு காட்சிப் படிமங்களாக ஓடிக் கொண்டிருக்கும் அக்கரைப்பற்று சந்தையின் நினைவுகள், அதன் இருப்பும் எரிப்பும் இந்நாவலில் மட்டுமல்ல அக்கரைப்பற்றுவாழ் அனைத்து மக்களின் உணர்விலும் பல தசாப்தங்களாக அனுபவித்து நிற்கின்ற பெரும் கடலாக பரந்துள்ள இழப்பினதும் துயரத்தினதும் வெம்மையின் சிறு துளியைத்தான் விமல் குழந்தைவேல் தனது பிறந்த மண் மக்களினது வாழ்வை ஆதாரமாகக் கொண்டு முடிவற்ற துயரங்களுடன் பதிவாக்கியுள்ளார்”

எனக் குறிப்பிடுகின்றார். இதே பின்னணியில் எழுந்த மற்றுமொரு நாவலாக தீரன் என்ற புனைபெயருடைய ஆர்.எம். நௌஸாத் எழுதிய ‘கொல்வதெழுதுதல் 90’ (2013) ஐக் குறிப்பிடலாம். 90 களில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட இராணுவ மற்றும் இயக்க வன்முறைகள், முஸ்லிம் அரசியல் எழுச்சி என்பவற்றை ஒரு கிராமியப் பின்புலத்தில் இந்நாவல் எடுத்தியம்புகிறது. 2009 இல் சுந்தரராமசாமி நினைவு நாவல் போட்டியில் முதலிடம் பெற்ற இவரது மற்றுமொரு நாவலாக ‘நட்டுமை’ (2009) அமைகின்றது. 1930 களில் வாழ்ந்த கிழக்கு முஸ்லிம் விவசாயப் போடிமார்களின் வாழ்க்கை முதலாவற்றை எடுத்துரைக்கும் கதையாகவும், கிழக்கிலங்கை குடியான் முஸ்லிம்களின் இனவரைவியல் குறித்த ஓர் பதிவாகவும் அமைந்திருப்பது நட்டுமை நாவலின் சிறப்பம்சமாகும். இவ்விரு நாவல்களிலும் தீரன் பயன்படுத்தியிருக்கும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனித்துவ மொழிப் பிரயோகங்களிற்காக இந்நாவல்கள் பேசப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள தனது ‘பெரிய மரைக்கார் சின்னமரைக்கார்’ (2005) நாவலைப் படிக்கலாம் என்று ஜுனைதா ஷெரீப் கூறுகின்றார். சிறந்த சாய்மனை எழுத்திற்கு உதாரணமாகக் கொள்ளப்படும் இந்நாவல் பற்றி சிலாகிக்கும் எம்.ஐ.எம். றவூப் (2009:61) :

> “கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் இருந்து அக்கரைப்பற்று வரை நீண்ட நிலக்குறியினை ஜுனைதா ஷெரீப் அவர்கள் வரைவு செய்து காட்டியிருக்கிறார். அந்நிலக் குறியுடன் உறவு கொண்ட பாத்திரங்களையும் உருவாக்கிக் காட்டியிருக்கிறார். கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் பண்பாட்டை பூர்வீகத்தை தொல்லாய்வு செய்ய விரும்பும் அல்லது புனைவு செய்ய விரும்பும் ஓர் இலக்கியச் செயற்பாட்டாளனுக்கு உதவக்கூடிய வகையில் முதல்தரவான பல விடயங்களை ஜுனைதா ஷெரீப் பிரதியில் எடுத்துக் கூறியிருக்கிறார். அந்த வகையில் நிராகரிக்கப்படமுடியாத ஒரு பிரதியாக இது காணப்படுகிறது எனலாம்”

எனக் குறிப்பிடுவது கவனம் கொள்ளத்தக்கதாகும். ஏழைக் குடும்பமொன்றின் அன்றாட வாழ்வியல் அவலங்களை வெளிப்படுத்தும் நாவலாக செ. குணரத்தினத்தின் 'துன்ப அலைகள்' (2002) அமைந்திருக்கிறது. இவரது 'ஒரு கிராமம் தலை நிமிர்கிறது' (2001) என்ற நாவல் பின்தங்கிய கிராமமொன்று கல்வி வாய்ப்புக் காரணமாக முன்னேறுவது பற்றிய இலட்சியக் கதையைக் களமாகக் கொண்டு எழுந்திருக்கிறது. 'நினைவு நீங்காதது' (2003) என்பது நா. பாலேஸ்வரியின் நாவல்களின் ஒன்றாகும். பெண்மையின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் இவரது நாவல்களில் இதுவுமொன்று. கிழக்கிலங்கை நாவல் வளர்ச்சிக்கு இவரது பன்னிரண்டு நாவல்கள் பங்களித்திருத்தாலும் ரமணிச்சந்திரன், லஷ்மி போன்றோரின் ஜனரஞ்சக எழுத்து வகைமாதிரியைச் சேர்ந்ததாக இவரது நாவல்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

'நேசவினை' (2014) 'பிரிவுக்குள் பிணைப்பு' (2010) என்பன ஹிதாயத்துல்லாஹ் மிர்சாவின் நாவல்களாகும். பிரிவுக்குள் பிணைப்பு நாவல் குறித்து கூறும் இவர், ''இந்நாவல் பிரிந்திருப்பவர்களை பிணையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. நமது இன்றைய சமூகத்தில் ஒருசில பிரிவுகளை வைத்துக்கொண்டு அதனை பல பிரிவினைகளாக்கி கொண்டிருப்பவர்களுக்கு பிரிவுக்குள் பிணைப்பு என்னும் இந்நாவல் பிரியத்துடன் துணைநிற்கும்'' என்கிறார்.

பதினொன்றுக்கும் மேற்பட்ட சிறுவர் நாவல்களை தந்தவர் ஓ.கே. குணநாதன் ஆவார். இவரது 'ஆடித்தீ' (2004), போர்க்கால நாவல் என்கின்ற முற்குறிப்புகளுடன் வெளிவந்த ஒன்றாகும். இந்நாவல் இனக்கலவரத்திற்குப் பிற்பட்ட இரு தசாப்தகால நிகழ்வுகளை காதல் மற்றும் இயக்கப் போராட்டங்கள் சார்ந்து விபரிக்கின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பின்புலத்தில் எழுந்த 'வாக்குமூலம்' எம். அப்துல் றஸாக்கின் நாவலாகும். மாணவர்களது நட்புசார் உலகமும், உணர்வுகளும் இந்நாவலில் முக்கியம் பெறுகின்றன. நாவலின் பிற்பகுதியில் முஸ்லிம் தேச எழுச்சியும், ஒலுவில் பிரகடனமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. கதை சொல்லல் முறையில் பாத்திரங்கள் தாமே தமது வாக்குமூலங்களை பதிவுசெய்யும் உத்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் இந்நாவல் அமைந்திருக்கிறது.

முஸ்லிம் தேசியத்தை முன்னிறுத்தும் நாவலாக எஸ். நஸிறுதீனின் 'நச்சு வளையம்' (2004) அமைந்திருக்கிறது. ''இலங்கையை கடல் மட்டுமல்ல இனரீதியான நச்சுவளையம் கூட எல்லோருடைய கழுத்தையும் சூழ்ந்திருப்பதாகப் பட்டது'' எனும் கதாபாத்திர வாசகம் இந்நாவலை விளக்கப் போதுமானதாகும். தமிழ் முஸ்லிம் உறவின் பிணைப்பும், பின்னர் உருவாகும் பிணக்கும் நாவலில் கதையாக வளர்த்துச் செல்லப்படுகின்றது.

''ஆண்களை ரகசியமாக மகிழ்ச்சி கொள்ளச் செய்யும். பெண்களை ஆவேசமாக எதிர்வினையாற்றத் தூண்டும்'' என்ற மகாவாக்கியம் பேசப்பட்ட நாவல் என உமா வரதராஜனின் 'மூன்றாம் சிலுவை'யைக் குறிப்பிடலாம். வயதில் தன்னைவிட இருபத்தியிரண்டு வருடங்கள் குறைந்தவளாகிய ஜூலியின்பால் ஏற்படும் விஜயராகவனின் காதலும், அக்காதலியின் பிரிவால் மரணம்வரை சென்று மீளும் கதையையும் கூறுவதாக இந்நாவல் அமைந்துள்ளது. வெளியான காலத்தில் மிகுந்த சர்ச்சைகளை எதிர்நோக்கிய இந்நாவல், பல்வேறுவிதமான வாசிப்புக்களுக்கும் உட்பட்டது. அவற்றில் அதிகமானவை இந்நாவல் பற்றிய கோணல் பார்வைகளே ஆகும். இந்நாவலை முன்னிறுத்தி பேசப்பட்ட 'ஆணிய எழுத்துக்களில் வெளிப்படும் காதல் அல்லது காமம்' தமிழகத்தில் பேசப்பட்ட அளவு ஈழத்தில் விசாலிக்கப்படவில்லை என்ற கருத்தும் உண்டு. இந்நாவல் பற்றிய ராஜகோபாலின் கூற்றொன்று பின்வருமாறு அமைந்துள்ளது :

> ''காமத்தின் தன்னிச்சையான வல்லமைக்கும் சமூக நெறிகளுக்கும் இடையிலான நுட்பமான மோதலை, அன்புக்கும் காமத்திற்கும் நடுவிலுள்ள நுட்பமான சிக்கலை,காமத்துக்கும் குரோதத்திற்கும் இடையேயான மெல்லிய உருமாற்றத்தை தமிழ்ப்படைப்பு மனம் வெற்றிகரமாகவே சித்திரித்துக் காட்டியுள்ளது. காமத்தின் பல்வேறு பரிமாணங்களை குபராவில் தொடங்கி தி. ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, லா.ச.ரா, ஜெயகாந்தன், கி.ரா., திலிப்குமார், லக்ஸ்மி மணிவண்ணன்,

ஜே.பி சாணக்யா, எனப் பல படைப்பாளிகள் வழியாகவும் நாம் அறிந்து கொள்ள முடியும். உமா வரதராஜன் இம்மாபெரும் தொடர்ச்சியில் மற்றொரு கண்ணி"

கலாசார காவல்களைத் தாண்டி, புனிதங்களை கேள்விக்குட்படுத்தும் இத்தகையதொரு ஆணியம் சார்ந்த நாவலை ஈழத்து சிறுகதை விற்பன்னர்களில் ஒருவரான உமா வரதராஜன் எழுதியது குறித்து பிரபஞ்சன் எழுப்பியது போல பலருக்குள்ளும் கேள்விகள் உண்டு. "உடைந்ததும் நிறைவேறாததுமான காதல் எனும்போது உடையாமலும் நிறைவேறியும் தான் ஆக வேண்டுமா என்ற கேள்வியே" அது.

தமிழ்நதியின் 'கானல்வரி'யும் (2010) இத்தகையதொரு விமர்சனத்தை வேறொரு கோணத்தில் எதிர்கொண்ட நாவலாகும். மணமான இருவரின் காதல் சிதைவுகளை நாவல் சித்திரிக்கிறது. இணையம் மூலம் அறிமுகமாகும் ஒத்த ரசனை கொண்ட இருவரும் கவிதை எழுதுகிறார்கள், காதலிக்கிறார்கள். பெண் இந்த உணர்வை இயல்பாக ஏற்றுக்கொள்ள ஆணினால் அது முடியவில்லை. பெண் தன்னுடைய நியாயங்களைச் சொல்ல விளைகிறாள் என்பதே கதை. இங்கு தனது மனைவிக்காகவும் குழந்தைக்காகவும் திருமணத்தின் பின் ஏற்பட்ட காதலை தியாகம் செய்யும் ஆணும், நவீன மாதவியாக பெண்ணும் சித்திரிக்கப்படுகிறாள். ஒரு பெண்ணின் பார்வையில் சொல்லப்பட்ட நீண்ட கடிதமாக இந்நாவல் வடிவம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'பார்த்தீனியம்' (2016) தமிழ்நதியின் மற்றொரு நாவலாகும். 80களின் தொடக்கத்தில் இருந்து 80களின் இறுதியில் முடியும் ஈழத்துச் சூழலைப் பேசும் இந்நாவல், அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்தில் நிலைகொண்ட இந்திய ராணுவத்தின் அத்துமீறல்களை பதிவு செய்யும் ஆவண இலக்கியமாக கொள்ளப்படுகிறது. விடுதலைப் போராளிகளின் அர்ப்பணிப்புமிக்க தியாகங்கள், இயக்கங்களின் உள்முரண்பாடுகள், சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட தமிழர்களின் அவலம், கொடூர இனவாதத்தை சந்ததித்தபோதும் பிரதேசவாதத்தையும், சாதியத்தையும் கைவிடாத தமிழ் மக்களின் வாழ்வியல் மனநிலை என்பனவற்றையும் இந்நாவல் பேசிச்செல்கிறது. இவ்வகையில் ஈழத்து போர்ச்சூழலைக் கொண்டு பெண்படைப்பாளி ஒருவரால் எழுதப்பட்ட முதல் நாவல் என்ற பெருமையையும் இது பெறுகிறது. இதனாலேதான்,"ஒரு வரலாற்றை எந்தளவுக்கு நேர்மையாகவும் படைப்புத்திறனுடனும் எழுதமுடியும் என்பதற்கு பார்த்தீனியம் உதாரணம்" என்கிறார் சுகுணா திவாகர்.

ஸர்மிளா செய்யத்தின் 'உம்மத்' (2014) என்ற நாவல் போராட்டத்தையும் அதன் பாதிப்பையும் இதற்குள்ளேயே வாழ்ந்த ஒரு முஸ்லிம் பெண் எப்படிப் பார்க்கிறார் என்பதைச் சொல்கிறது. மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்ந்த மூன்று பெண்களின் வாழ்வியலைச் சித்திரிப்பதாக இந்நாவல் அமைந்துள்ளது. யோகா, தெய்வானை, தவக்குல் ஆகிய மூவரும் கலாசாரக் கட்டுமானங்களினால் பெண் என்ற ரீதியில் எவ்வாறு தண்டிக்கப்படுகின்றாள் என்பதை நாவல் விமர்சனம் செய்கிறது. தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை குலைக்கப்பட்டு நம்பிக்கையீனமும் விரோதமும் வளர்க்கப்பட்டதை எடுத்துக் கூறுகிறது.

'பதுமராகம்' (2016) இறக்காமம் பர்ஸானா றியாஸ் எழுதிய நாவலாகும். கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே வழக்கில் உள்ள சீதனக் கொடுமையின் வெப்புசாரமான வெளிப்பாட்டை காதல், குடும்பம், திருமணம் என்ற உறவின் வழியே நாவல் நகர்த்திச் செல்கிறது. புரட்சிபாலனின் 'வசந்தகாலக் கோலங்கள்' (2001) திருக்கடலூர் பகுதியில் வாழ்கின்ற மீனவ மக்களது அன்றாட வாழ்வை சித்திரிக்க முயல்கிறது.

பேரின நெருக்குவாரத்தால் வாழ்விழந்த ஒரு கிராமத்தின் கதையை மண்ணின் மணம் கமழ எடுத்துச் சொல்லும் நாவலாக அஸீஸ் எம். பாயிஸின் 'வயலான் குருவி' (2012) ஐக் குறிப்பிடலாம். வஹாப்தீனின் 'கலவங்கட்டிகள்' (2015) நாவல் கடல் மூடுண்ட கிராமம் ஒன்று தொழிற்போராட்டங்களை நடத்தி அன்றாட வாழ்வுக்காக அலைக்கழிவதை எடுத்துக் கூறுகிறது. இவரின் 'குலைமுறிசல்' (2016) அங்கவீனமான மனிதன் ஒருவனின் வாழ்வியல் போராட்ட

கதையைச் சொல்கிறது. ஒலுவில் துறைமுக வருகையால் இருள்துயர் மூடிய மீனவர்களின் வாழ்வியலை எடுத்துச்சொல்லும் நாவலாக இவரது 'தோறாப்பாடு' (2018) அமைந்துள்ளது.

பின்னவீனத்துவ அடையாளங்களோடு புறப்பட்ட நாவல்களாக திசேராவின் 'ஏவிவிடப்பட்ட கொலையாளி' (2008) மற்றும் அஹமட் சாஜிதின் 'பஞ்சபூதம்' (2015) என்பவற்றை குறிப்பிடலாம் என்கிறார் பேராசிரியர் செ. யோகராசா. (2015:16)

சுனாமி குறித்த புனைவுகளும் யதார்த்தமும் கைகோர்க்கும் படைப்பு என திசேராவின் நாவலைக் கொள்ளலாம். கடலின் சூதாட்டம், மனிதர்களின் சுயரூபங்கள், யுத்தத்தின் பின்னரான இன்னுமொரு சூறையாடல் என்றவாறாக நடக்கும் கதை, மொழி நடனங்களுடன் விரிந்து செல்கிறது.

கதையின் மையத்தை காணமுடியாமல் பஞ்சபூதங்களின் மீதேறி நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்லும் ஒரு வாசகப் பயணமாக அமைகிறது சாஜித் அஹமத்தின் பஞ்சபூதம். பூடகமான அரசியல் விமர்சனம் செய்யும் படைப்பாகவும் இந்நாவல் அமைகிறது. ஜிப்ரிஹாசன் (2018:37) சொல்கையில் :

> "ரோலான்ட்பார்த் அறிவித்த பிரதிதரும் இன்பத்தை வாசகனை சுகிக்கச் செய்யும் எல்லா அம்சங்களுடனும் வெளிப்பட்டிருக்கிறது சாஜித் அஹமத்தின் பஞ்சபூதம் குறுநாவல். இந்த நாவல் அளவில் சிறியதாக இருப்பினும் அது வாசகனுக்குள் கிளர்த்தும் அதிர்வுகள் பெரியதாக இருக்கின்றன. புனைவுத் தன்மையாலும் கதைசொல்லும் முறையாலும் கவனிப்பை வேண்டி நிற்கும் ஒரு பிரதியாகத் திகழ்கிறது என்பது எனது கணிப்பாகும். எஸ். ராமகிருஷ்ணனின் 2005 ற்கு முற்பட்ட பல கதைகளில் வெளிப்படும் மீபுனைவுத் தன்மையே இக்கதையிலும் வெளிப்படுகிறது. இத்தகைய கதைகள் இலங்கைத் தமிழ்ச் சூழலில் மிகச்சொற்பமான கதைசொல்லிகளாலேயே பரிசோதிக்கப்பட்ட விடயம் என்பது இங்கு நமது கவனிப்புக்குரியதொன்று"

என்கிறார். சமகாலத்தில் சமூக வலைத்தளங்களில் அதிக திறனாய்வுப் பார்வைகள் இந்நாவல் குறித்து எழுதப்பட்டிருக்கின்றன. புத்தரை மறுவாசிப்புச் செய்யும்நோக்கில் ஏ.எம். சாஜித் அஹமட்டால் எழுதப்பட்ட மற்றுமொரு நாவல் புத்தனை பல்வேறு நிலைகளிலும் மீள்வாசிப்புச் செய்யும் 'இது புத்தன் காலம்' (2017) ஆகும்.

### 3. முடிவுரை

தொகுத்து நோக்கும்போது, போரினையும் போருக்குப் பிந்தைய வாழ்வியலையும் கிழக்கிலங்கை நாவல்கள் வெகுவாக பிரதிபலிக்கின்றன. சமூக, தனிமனித பிரச்சினைகள் பலவும் நாவல்களின் உட்பொருளாகின்றன. அகதிவாழ்வும் சமூக மற்றும் பண்பாட்டுச் செல்நெறிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பனவும் நாவல்களில் பேசுபொருளாகியுள்ளன. இங்கு செறிந்து வாழும் தமிழர் - முஸ்லிம்கள் ஒற்றுமை, பிளவுகள் என்பன ஒளிவு மறைவின்றி பேசப்படுகின்றன.

இவ்வகையில் கிழக்கிலங்கை வகுதிக்குள் மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கியிருந்தாலும் அம்பாறை மாவட்டத்திலேயே நாவல் இலக்கியத்தின் வெளிப்பாடு சிறப்பாய் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இன்று சமூக ஊடகங்களின் பெருக்கமும், இலக்கியத் தொடர்பாடலும் வெகுவாக வளர்ந்து வரும் நிலையில் நாவல் இலக்கியங்கள் குறித்த பல்வேறு பார்வைகளும் விவாதங்களும் கூட இங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நம்மவர்களின் நாவல்கள் பலவும் சர்வதேச மற்றும் தேசிய போட்டி நிகழ்வுகளில் பரிசில்களைப் பெற்று கவனம் பெறுகின்றன. செ. யோகராசா, றமீஸ் அப்துல்லா, பிர்தௌஸ் சத்தார் போன்ற பலரும் நாவல் ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். துறைசாராத எழுத்தாளர்கள், விமர்சகர்களின் பங்கும் பணியும் கூட இங்கு போற்றப்படத் தக்கவையே.

முடிவாக, ஈழத்து நாவல் வரலாற்றெழுதுகையில் கிழக்கிலங்கை நாவல்களுக்கும் தனியிடம் உண்டு என்பதை நாம் அழுத்திச் சொல்வதோடு விடுபடல்களையும் சேர்த்துப் பார்க்குமிடத்து நமது சாதனை மிகப்பெரிது என்றே எண்ணத் தோன்றுகிறது.

**உசாத்துணைகள்**

வெற்றிச் செல்வன்,தே. (2016). *புலம் பெயர் இலக்கியமும் வரலாறும் இலக்கியமும்.* ithrees.lk

ஜெயமோகன் (2008). யாழ் நிலத்துப் பாணன் 2. http://www.Jeyamohan. in

ஷோபாசக்தி (2007). வசந்தத்தின் இடிமுழக்கம். www.shobasakthi.com

யோகராசா, செ. (2015). கிழக்கிலங்கை இலக்கியச் செல்நெறி. *கூர்மதி.* தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு, தமிழ்மொழி அலகு, கல்வியமைச்சு, கொழும்பு.

பௌசர், எம். (2011). *முன்குறிப்பு. கசகறணம்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

றவூப், எம்.ஐ.எம். (2009). *பெரிய மரைக்கார் சின்னமரைக்கார் தனிவரைவா? இன வரைவா? சாய்மனை எழுத்துக்கு மிகச்சிறந்த உதாரணம்' எதுவரை?.* ஏப்ரல் - மே, 2009, இலண்டன்.மூன்றாவது மனிதன்.

ஹிதாயத்துல்லாஹ் மிர்சா (2010). *பிரிவுக்குள் பிணைப்பு, முன்னுரை.* மிர்சா பதிப்பகம், நிந்தவூர்.

ராஜகோபால் (2010). தவறான காலத்தில் வந்து சேர்ந்த துக்கம். வியூகம்.

*கலை இலக்கிய படைப்புகளும் பதிவுகளும்.* www.umavaratharajan.com

ஜிப்ரி ஹாஸன் (2018). *சாஜித் அஹமதின் ''பஞ்சபூதம்'' சொற்கள் குதூகலிக்கும் கதைப்புத்தகம்.* விரியத் துவங்கும் வானம், எதிர்ச்சொல் பதிப்பகம், வாழைச்சேனை.